செ.வெ.எண்.110 நாள்.10.03.2017

**காஞ்சிபுரம் மாவட்டம்**

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை ஜம்மு–காஷ்மீர் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் அமைச்சர் திரு.அப்துல்ஹக்கான் தலைமையிலான குழுவினர் பார்வையிட்டனர். ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.வை.ஜெயக்குமார் உடனிருந்தார்.**

**********

மாண்புமிகு அமைச்சர் அவர்களுடன் கிராம சுகாதார இயக்குநர் திரு.ரகுமான் கஹாசி, ஒருங்கிணைந்த குடிநீர் மேலாண்மை திட்ட அலுவலர் திரு.தீபத் துபெ, அமைச்சரின் தகவல் அலுவலர் திரு.ஷெக் சலீம், ஊரக வளர்ச்சி செயற்பொறியாளர் திரு.பர்வைஸ் இக்பால் ஆகியோர் உடன் வந்திருந்தனர்.

முன்னதாக காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் அஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தில் ரூபாய் 21 இலட்சத்து 20,000 மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பசுமைகுடில் நாற்றங்காலை பார்வையிட்ட குழுவினர், விதைகள் முளைக்க வைப்பதற்கு பயன்படும் தாய் பதியம் ( Mother Bed) எனப்படும் மண்தளத்தை பார்வையிட்டனர். விதைகள் தாய்பதியம் மூலம் முளைக்க வைப்பதற்கு மேற்கொள்ளப்படும் முறைகள், மண்தளம் தயாரிப்பது குறித்தும், விதை முளைத்த பின்பு மண் நிரப்பபட்ட பாலிதீன் பைகளில் வைப்பது குறித்தும் செயல்முறை விளக்கம் மூலம் குழுவினருக்கு ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எடுத்துரைத்தார்.

பின்னர் பசுமை குடில் நாற்றங்கால் பராமரிப்பில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு அமைக்கப்பட்டுள்ள பயிற்சி குறித்து குழுவினர் கேட்டறிந்தனர். நாற்றங்காலில் வளர்க்கப்படும் செடிகளில் பூச்சிகள் பிடிக்காமல் இருப்பதற்கு வளர்ச்சி ஊக்கியாக பஞ்சகாவியம் கரைசல் தெளிக்கப்படுவதையும் பார்வையிட்டனர். தற்போது நாற்றங்களில் உள்ள கன்றுகள் வேறு இடங்களில் நடுவதற்கு தரப்படுகின்றன என்பதையும் கேட்டறிந்தனர். பசுமைகுடில் நாற்றங்காலில், சொர்க்கம், நீர்மருது, மகாகனி, சரக்கொன்றை, குள்மஹார், தான்றி, மாதுளை, ஈட்டி, கொய்யா, புங்கை, பூவரசு, அகத்தி, நெல்லி, மந்தாரை, பலா, புளியங்கன்று, மாங்கனி, சப்போட்டா ஆகிய கன்றுகள் வளர்க்கப்படுள்ளதை குழுவினர் பார்வையிட்டனர்.

பின்னர் கன்றுகள் வளர்வதற்கு தேவையான தண்ணீர் வசதி குறித்து கேட்டறிந்த குழுவினர் ஊராட்சிக்கு சொந்தமான இடத்தில் மரக்கன்றுகள் வளர்க்கப்படுவதை பார்வையிட்டனர். மரக்கன்றுகள் வேர்ப்பகுதி ஈரப்பதம் அதிகநாட்கள் இருப்பதற்கு புதிய தொழில்நுட்ப முறை செயல்படுத்தப்பட்டுள்ளதை இயக்குநர் எடுத்துரைத்தார். இதனால் பராமரிப்பு எளிதாவதையும், செடிகள் நன்றாக வளர்வது குறித்தும் தெரிவித்தார்.

பின்னர் நாவல் ஏரி வரத்துக்கால்வாய் மேம்பாடு பணிகள் ரூ.5 இலட்சம் மதிப்பிட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளதை குழுவினர் பார்வையிட்டனர். சாலையோரம் மரக்கன்றுகள் நடுப்பட்டுள்ளதையும் குழுவினர் பார்வையிட்டனர். பின்னர் மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம் சிலாவட்டம் ஊராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதையும், குப்பைகள் மக்கும் குப்பை, மட்காத குப்பை என பிரிக்கும் முறையும், மட்கும் குப்பைகளை பயன்படுத்தி கம்போஸ்ட் உரம் தயாரித்தல் குறித்தும் குழுவினரிடம் எடுத்துரைக்கப்பட்டு பின்னர் மண்புழு உரம் தயாரிக்கும் கூடத்தையும் பார்வையிட்ட குழுவினரிடம் அதன்மூலம் விவசாயிகள் அடையும் பயன்குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

பின்னர், குழுவினர் சிலாவட்டத்தில் கிராம ஊராட்சி சேவை மையத்தில், புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும், சுகாதார மேம்பாடு குறித்தும், கிராம வறுமை ஒழிப்பு சங்கம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மகளிரிடம் கலந்துரையாடினார். திட்டத்தின் உயிர்மூச்சு எனப்படும் உறுதிமொழியை குழுவினர் அமைச்சர் தலைமையில் எடுத்துக்கொண்டனர். பின்னர் வெள்ளைப்புதூர் ஊராட்சியில் ரூ.5,30,000/– மதிப்பீட்டில் வேடந்தாங்கல்–வெள்ளைப்புதூர் சாலையில் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளதை பார்வையிட்டனர். வெள்ளைப்புதூரில் ரூ.21,86,000/– மதிப்பீட்டில் பசுமை குடில் நாற்றங்கால் அமைக்கப்பட்டுள்ளதையும் வெள்ள நிவாரணத்திற்காக பிரதமர் வீட்டுவசதி திட்டத்தில் ரூ.1,70,000/– மதிப்பீட்டில் வீடு கட்டப்பட்டுள்ளதையும் குழுவினர் பார்வையிட்டனர்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் திரு.தணிகாசலம், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் பங்கேற்றனர்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.